# Word Of Christ

# கிறிஸ்துவின் உபதேசம்





ஆசிரியர்

சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

## STATMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWS PAPER 'WORD OF CHRIST' (SEE RULES 8)

| | |
|---|---|
| 1. Place of Publication | Batlagundu |
| 2. Periodicity of Publication | Monthly |
| 3. Printer's Name | Mr C. PandiaRajan |
| Nationality | Indian |
| Address | Santhi Printers, Main Road, Batlagundu-624 202 |
| 4. Publisher's Name | Mr.B. Arjunan |
| Nationality | Indian |
| Address | 2-2-102 D/5 Kanavaipattiroad Kamarajapuram, Batlagundu-624 202, |
| 5. Editors Name | Mr. B. Arjunan |
| Address | as above |

I, B. Arjunan hereby declare that the Particulars given above are true to the best of my Knowledge and belief.

B. ARJUNAN

Dated 31-3-96 Editor and Publisher,

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST
மரம் 4 ஏப்ரல் 1996 கனி 9

# புதிதும் ஜீவனுமான மார்க்கம்

## A New And Living Way

இவ்வுலகில் அநேக மார்க்கங்கள் இருப்பதை நாம் காணமுடிகிறது. ஆனால் பரிசுத்த வேதாகமம் ஒரே ஒரு மார்க்கம் தான் மெய்யான மார்க்கம், அது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்கிறது. இந்த மெய்யான மார்க்கத்தைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இம்மார்க்கத்தின் வழியாகவே தேவனிடத்தில்போய் சேரமுடியும் வேறெந்த மதபேதம்என்று சொல்லப்படுகிற மார்க்கத்தின் வழியாக தேவனிடத்திற்குச் செல்லமுடியாது. ஆகையால் சகோதரரே! நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால் அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும், தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா பிரதான ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம் என்று எபி 10:19-22ல் வாசிக்கின்றோம். ஆம் பிரியமானவர்களே ஞானஸ்நானத்தினாலே அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்ட நாம் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வழியாய் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது.

முதல் நூற்றாண்டில் இந்த மார்க்கத்தை எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்று வேதபாரகர், பரிசேயர் போன்றோர் விடாமுயற்சி எடுத்தனர். ஆனால் இன்றுவரை இம்மார்க்கத்தையாராலும் அழிக்கமுடியவில்லை. அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை; ஒருகல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்- என்று தானி 2:44,45 பார்க்கிறோம் அப்படியே யாரும் பெயர்க்கமுடியாத கன்மலையாகிய கிறிஸ்து இந்த இராஜ்யங்களெல்லாவற்றையும் நொறுக்கி என்றென்றைக்கும் நிற்கும் நிலையான ஒரே ஆவிக்குரிய இராஜ்யத்தை ஸ்தாபித்தார். மேலும் இது சத்தியம் என்று சொல்லப்படுகிறது சவுல் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும், ஸ்தீரிகளையாகிலும், தான் கண்டுபிடித்தால் அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான் அப் 9:2 இப்படி தேவனுடைய சபையை துன்பப்படுத்தி, அதை பாழாக்கிக் கொண்டிருந்த இந்த சவுலை கர்த்தர் சந்தித்தார். நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அவனோ நடுங்கித் திகைத்து ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான் அப் 9:5,6. அருமையானவர்களே! நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து ஏற்படுத்தின் புதிய மார்க்கம் ஜீவனுடைய மார்க்கம்,

ஒரு செத்த மார்க்கமல்ல, இம்மார்க்கத்தின் வழியாகச் சென்றால் இரட்சிப்பு உண்டு. இல்லையென்றால் நம்முடைய விசுவாசம் விருதா. இம்மார்க்கத்தில் திரளான புருஷர்களும் ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டார்கள் என்று அப் 5:14 ல் வாசிக்கின்றோம்.

அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாளும் அவனைச் சேர்த்துக் கொண்டு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துகாண்பித்தார்கள் இந்த அப்பொல்லோ கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் சில சீஷரை கண்டு: நீங்கள் எந்த ஞானஸ்நானம் பெற்றீர்கள் என்றான். அதற்கு அவர்கள் யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பெற்றோஎன்றார்கள் அப்பொழுதுபவுல்யோவான் தனக்குபின் வருகிறவராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாயிருக்க வேண்டுமென்று ஜனங்களுக்கு சொல்லி, மனந்திரும்புதலுக் கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானே என்றான அதை கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று அப் 18:25 19:5 ல் பார்க்கிறோம.

இயேசுவுக்கு முன்னே எத்தனையோ வழிபாடுகளும் பலி, சடங்காச்சாரங்களும் இருந்தது அதாவது பிதாக்களின் காலம்மோசேயின் காலம். யோவான்வரை தீர்க்கதரிசிகளின் காலம. இப்பொழுது கிறிஸ்துவின் காலத்திலிருக்கிற நமக்கு புதிதும் ஜீவனுமான மார்க்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இன்று, நான் மோசேயின் சீஷன், யோவானின சீஷன், நான் இந்த சபை விசுவாசி, நான் அந்த சபை விசுவாசி என்று சொல்ல முடியாது. ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், (சரீரமான சபை, மார்க்கம்)ஒரே ஆவி, ஒரே கர்த்தர் ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவனும் பிதாவும் உண்டு.

இயேசுவானவர் தமது மாமிசமாகிய திரையின் வழியாய் புதிதும், ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார் என்று வாசிக்கிறோம். இயேசுவானவருக்கு ஒரே சரீரம், ஒரு சபை தான் உண்டு. இன்று அநேகர் இச்சபையில் இரட்சிப்பு இல்லை, எங்களுடைய சபையில் தான் இரட்சிப்பு உண்டு என்று சொல்லி இயேசுவின் சரீரத்தை கூறு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர் ஒரே ஒரு மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். இம்மார்க்கத்தின் வழியாக உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக்கடவோம்.

மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருள் என்னவெனில் பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறவருமாய், பரிசுத்த ஸ்தலத்திலும் மனுஷரால் அல்ல, கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரிய ஊழியஞ் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு என்று எபி 8:1,2 ல் வாசிக்கின்றோம். பிரிய நண்பரே! புதிதும் ஜீவனுமான மார்க்கம் மனுஷரால் உண்டாக்கப்பட்டதல்ல மனித கட்டுபாடுகளுக்கு உட்பட்டதுமல்ல. ஒரே பிரதான ஆசாரியர் இயேசுகிறிஸ்துவே. இவரே சபையின் தலைவர் இவரே இரத்தம் சிந்தினவர். இவரே பாவிகளை மன்னிக்கிறவர். இவரே உலக இரட்சகர். இவரே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர். இவரே உலகத்தின் நியாயாதிபதி இவரே புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினவர். இவர் இல்லாமல் யாரும் பரலோகத்திற்கு பிதாவினிடம் செல்லமுடியாது. இன்றே இம்மார்க்கத்தில பிரவேசியுங்கள்.

★ சபைச் செய்திகள்:

1. பிப்ரவரி 28, 29 ஆகிய தேதிகளில் மதுரை எல்லீஸ் நகரில் நடைபெற்ற சுவிஷேசக் கூட்டத்தில் Bro. Jim Waldron, U.S.A. அவர்கள் செய்தி கொடுத்தார்கள்.

அச்சமயம் 1. டேவிட், 2. சுமதிடேவிட், 3. சிவநாதன 4. செல்வி கண்ணம்மாள் (Blind) ஆகிய நால்வரும

சுவிசேஷத்திற்குக் கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். இக்கூட்டங்களை மதுரை எல்லீஸ் நகர் கிறிஸ்துவின் சபைஊழியர் சகோ. பிலேமோன் ராஜா அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

2. மார்ச் 17ம் தேதி வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடும் ஞாயிறு ஆராதனைக்கு சகோ. டக்ளஸ் அவர்கள் குடும்பத்துடன் வந்து செய்தி கொடுத்தார்கள் அவ்வமயம் சகோ காளியம்மாள் கிறிஸ்துவின் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்

3. கர்த்தருக்குச் சித்தமானால் ஏப்ரல் 15,16 தேதிகளில் “சகோதரிகளுக்கான இரண்டாவது கருத்தரங்கு” பெங்களூரில் சகோ டக்ளஸ் அவர்களால் ஏற்பாடுசெய்யப் பட்டு நடைபெற உள்ளது. இக்கூட்டங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

★ மார்ச் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்.

1. சகோ. உதய பாஸ்கர்—மதுரை
2. சகோ. ஜெபர்சன் ஜேக்கப்— ஐரேனிபுரம்
3. சகோதரி மலர்கொடி ஸ்டீபன் காளையார்குறிச்சி
4. சகோதரி ரூத் G. கல்லுப்பட்டி
5. சகோதரி மேரியம்மாள் வத்தலக்குண்டு
6. சகோதரி மேரிஎலிசபெத் கலைவாணி வத்தலக்குண்டு

★ மார்ச் மாத இதழின விடைகள்:

| | |
|---|---|
| 1. பன்றியின் மூக்கிலுள்ள பொன்மூக்குத்திக்கு நீதி 11:22 | 6. ஆம் |
| 2. கைக்கொள்ள யோ 14:24 | 7. குழந்தைக் கேற்றலைசவோ |
| 3. நீ கேளாதே நீதி 19: 27 | 8. அவர் |
| 4 இப்பிரபஞ்சத்தின் மேல் II தீமோ 4:10 | 9. பாக்கியவான்களா யிருப்பீர்கள் |
| 5 ஏற்றுக் கொள்ளுங்கள் ரோம 15:7 | 10 ஆறு |

★ இம்மாத வேத அறிவுப் போட்டி:

முதல் ஐந்திற்கு வசன ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடைமட்டும் வேதத்திலிருந்து எழுதி இம்மாத இறுதிக்குள் அனுப்பவும்.

1. நானே உன்னை நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் என்று யார் யாரை பார்த்து சொல்வது?

2. அவர் நீர்த்துளிகளை அணுவைப் போல ஏறப்பண்ணு கிறார். அலைகள் மேகத்திலிருந்து எப்படிச் சொரிகிறது?

3. எவர்களுடைய நீதியிலும் உங்கள நீதி அதிகமாயிரா விட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்?.

4. தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்க தாக அடையாளங்களையும் அற்புதங்களையும் எவர்கள் செய்வார்கள்?

5. கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஆசாரியர் ஊழியம் செய்கிறவருமாயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கு யார்?

6. ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்து தான் சாக வேண்டுமென்று கோரியது யார்?

7. தேவன் படைத்ததெல்லாம் எப்படியிருக்கிறது?

8. ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும் என்று எந்த சபையின் தூதனுக்கு எழுதச் சொன்னார்?

9. யாருக்கு ஆயத்தம் பண்ணின தூக்கு மரத்தில் ஆயத்தம் பண்ணினவனையே தூக்கிப் போட்டார்கள்?

10. தாங்கள் ஒன்றும் தரிசியாதிருந்தும தங்களுடைய ஆவியின் ஏவுதலை பின்பற்றுகிற மதிகெட்ட தீர்க்க தரிசிகளுக்கு என்ன?

[illegible]

[illegible]

[illegible]

Post Office Box No. 8405
Bangalore-560 084
INDIA.

# இலவச வேதபாடத் திட்டம்

[illegible]

முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

CHURCH OF CHRIST
BIBLE CORRESPONDENCE COURSE
POST OFFICE BOX: 8405
BANGALORE-560084.

MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு காலை 9-00
வியாழன் மாலை 6-45

கிறிஸ்துவின் சபை
2-2-102 D/5, காமராஜபுரம்
கணவாய்பட்டி ரோடு,
சப்ரிஜிஸ்டர் ஆபிஸ் சந்து
வத்தலக்குண்டு-624 202.

இவ்விதழ் உங்களுக்கு இலவசமாக
அனுப்பப்படுகிறது.

WORD OF CHRIST

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
Batlagundu-624 202.
S. India

Edited and published by B.Arjunan M.A.,A.Bs.,on behalfof church of Christ 2.2.102D/5 Kanavaipatti RoadBTL
Printed by C. Pandiyarajan B.Sc., SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624 202.